**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1994ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்பு தமிழ்நாடு (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்," எனக்கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

## (இ) திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடி, 1994.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*1994 ஜனவரி 3]* [திரு. மு. தென்னவன்]

*"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம்.*

*தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.*

## 4. அரசினர் தீர்மானம்.

### மழை, புயல் ஆகிய இயற்கைச் சீற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். 1993 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் ஏற்பட்ட பெரும் மழை, புயல் ஆகிய இயற்கைச் சீற்றங்களால் தமிழகத்தில் ஏற்பட்ட பெரும் பாதிப்புகள் மற்றும் அதன்மீது அரசு மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.*

*முற்பகல் 11.35*

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"1993 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் ஏற்பட்ட பெரும் மழை, புயல் ஆகிய இயற்கைச் சீற்றங்களால் தமிழகத்தில்*